1973 நவம்பர் 30]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் இங்கே கூறியிருக்கிற விடை போதுமான அளவிற்கு மற்றவர்களுக்கு விளக்கமாக அமையும். ஆகவே யாரிடத்தில் அந்த உரை இருந்தாலும் அதைக் கொடுத்தால் அரசு அதை வெளியிடுவதற்கான முயற்சியை மேற்கொள்ளும்.

Monument found near Madras Medical College

* 512 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that a monument has been found near the Union Defence Department's lands near the Madras Medical College ;

(*b*) if so, whether the State Government Archaeologists have examined it; and

(*c*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ஆம்.

(உ) சென்னை மருத்துவக் கல்லூரியின் எதிரில் உள்ள முக்கோண வடிவமான நிலத்தில் 12 அடி 9 அங்குலம் நீளமும், 6 அடி 2 அங்குலம் அகலமும் உள்ள மேடையும் அதன் மீது போடப்பட்டுள்ள கடைப்பைக்கல்லில் 7 அடி நீளமும், 3 அடி அகலமும் உள்ள பகுதி கல்வெட்டப்பட்டுள்ளது. இது ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியாரிடம் மருத்துவராகப் பணியாற்றிய எட்வர்டு பல்க்லி என்பவரின் கல்லறை எனத் தெரியவருகிறது.

THIRU N. DENNIS : Sir, may I know whether complete excavation was done in that place and also whether there is any objection from the surrounding property owners for complete excavation?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த இடம் அரசுக்குச் சொந்தமாகத்தான் இருக்கிறது. 1714 ஆகஸ்ட் 8-ம் நாள் அன்று அந்த கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த அந்த மருத்துவ அதிகாரி இறந்தார் என்றும் அவரது விருப்பத்திற்கிணங்க அந்த இடத்தில் புதைக்கப்படவேண்டுமென்று கேட்டதற்காக அங்கு புதைக்கப்பட்டிருக்கிறது. அந்தளவிற்குத் தான் கிடைக்கப்பெற்றிருக்கிறது. அதன் மேலே எழுதப் பட்டிருப்பது, ரோமானியமொழியில், இத்தாலியமொழியில்தான்

அந்தக் கல்வெட்டில் எழுதப்பட்டிருக்கிறது. அது தவிர வேறு ஒன்றும் கிடைக்கவில்லை. அந்தப் பகுதியை யாரும் அகழ்ந்து காண வேறு ஒன்றும் இல்லை.

திரு. க. உரொ. எட்மண்ட் : நெல்லை மாவட்டத்தில் திருவைகுண்டத்தில் ஆதிச்சநல்லூர் பகுதியில் புதைபொருள் ஆராய்ச்சி நீண்ட நாட்களுக்கு முன்பு தொடங்கப்பட்டு எந்த விதமான ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்படாமல் இருக்கிறது. அங்கு மண் எடுக்கக்கூடாது என்று அரசாங்க விளம்பரத்தட்டிகள் வைத்திருக்கிறார்கள். அதுபற்றி விரைவில் பரிசீலனை செய்யப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதன் முழுக் குறிப்புகளும் இல்லை. அதுபற்றி தமிழ்நாடு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் பணிகளை மேற்கொண்டிருப்பார்கள். விவரம் அறிந்து தக்க நடவடிக்கைகள் எடுக்கலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, it is stated that there are a number of stone inscriptions in different parts of the city which have not been excavated and they are being ruined every day. So, may I know from the Hon. Minister for Education whether he will arrange for a thorough investigation of all these things and also see that they are kept in a safe place ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்படிப்பட்ட பணிகளை எல்லாம் ஆற்றுவதற்காகத்தான் தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகம் அமைக்கப்பட்டிருக்கிறது. பழைய சின்னங்களைக் காப்பாற்றுவது மட்டுமல்லாமல் மறைந்திருக்கிற, புதைந்து கிடக்கிற பொருள்களை வெளிக் கொண்டுவருவதன்மூலம் தமிழ்நாட்டின் பண்டை தொன்மையான வரலாற்றினை வெளிப் படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு பெருநகரங்களையும் எடுத்துக் கொண்டிருக்கும் வகையில் சென்னை மாநகரிலுள்ள பழஞ்சின்னங்களை பார்வையிடுதல், அகழ்ந்து காணுதல், அவற்றைப் பாதுகாத்து வருதல் ஆகிய பணிகளை இக்கழகம் மேற்கொள்ளும்.